
# தலைவாசல்
Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 34 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை நவம்பர் 03, 2020



# வவு. வடக்கு கல்வி வலயத்தில் ஒரு கோடியே 60 இலட்சம் ஆட்டையை போட்ட உத்தியோகத்தர் சிக்கினார்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 16 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்த உத்தியோகஸ்தர் சிக்கியுள்ளார் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உத்தியோகஸ்தர், தற்போது வேறொரு திணைக்களத்தில் பணியாற்றி வருகின்றார்.

03

## சுமந்திரன் அணிக்கு கை கொடுத்த சைக்கிள்

மாவை அணியினை முடக்கி சுமந்திரன் அணி மீள் எழுச்சியடைய பகீரதன பிரயத்தனத்தில் குதித்துள்ளது.

நேற்றிரவு யாழ்.நகரிலுள்ள சுமந்திரனின் வீட்டினில் நடைபெற்ற சந்திப்பொன்றில் மாவையும் இணைந்துள்ளார். ஆயினும் மாவை எதிர்பாராத விதமாக

03

## யாழில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 5000 ரூபா

கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணியமைக்காக முன் பாதுகாப்பு நடவடிக்கையாக யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நாளை முதல் 5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் படுவதாக மாவட்ட செயலர் க.மகேஸன் கூறியுள்ளார்.

03



## நாடாளுமன்ற பேரவைக்கு பிரதிநிதியாக டக்ளஸ்

நாடாளுமன்ற பேரவையின் பிரதமரின் பிரதிநி தியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப் பட்டுள்ளார்.

20 ஆரசியல் அமைப்பின் பிரகாரம் உருவாக்கப்படும் நாடாளுமன்ற பேரவையின் உறுப்பினராக டக்ளஸ் தேவானந்தாவின் பெயரை பிரதமர் மஹிந்த ராஜபக்சா பரிந்துரைத்திருந்தார்.

இதையடுத்து இந்த பரிந் துரையை சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன அங்கீ கரித்து டக்ளஸை நாடாளுமன்ற பேரவையின் பிரதமரின் பிரதிநி தியாக நியமித்துள்ளார் என பிரதமர் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.



## கடலில் குதித்து நான் இறந்தாலும் கொரோனாவை ஒழிப்பேன்

### சுகாதார அமைச்சர் சபதம்

நான் கடலுக்கு பலியானால் கொரோனா தொற்றை நாட்டிலிருந்து ஒழிக்க முடியுமாயின், அதற்கும் நான் தயார் என இன்று பாராளுமன்றத்தில் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

மருத்துவ கட்டளை சட்டத்தின் கீழ் கட்டளைகள் சிலவற்றை சமர்ப்பித்து இந்த விடயங்களை

03





## வல்வெட்டிதுறையில் சிலிண்டர் வெடித்து ஒருவர் காயம் வீடுகள் வாகனங்கள் சேதம்



வல்வெட்டிதுறையில் சிலிண்டர் வெடித்து சிதறியதில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் அங்கிருந்த வாகனம் மற்றும் அருகிலுள்ள வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

03

## கொரோனா இன்று பலி 23- தொற்று 272



இலங்கையில் 23 ஆவது கொரோனா மரணம் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு 15 பிரதேசத்தை சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவர் நேற்று (02) அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில் பிரேத பரிசோதனையின் போது அவருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் காய்ச்சல், இருமல், தொண்டை வலி ஆகிய நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்ததாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், சுவாசப்பை கோளாறு

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**



# சுகாதார அமைச்சரின் செயற்பாடு நகைக்கும் சர்வதேச நாடுகள்

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு 'மந்திரவாதி மருத்துவரின்' ஆலோசனைக்கு அமைவாக செயற்படும் சுகாதார அமைச்சரின் செயற்பாட்டினால் சர்வதேசத்தின் மத்தியில் எமது நாடு நகைப்பிற்குரியதாக மாறியுள்ளதென முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் மேலும் சிலரும் மதரீதியான சடங்கில் ஈடுபடும் புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையிலேயே மங்கள சமரவீர தனது ருவிட்டர் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்து வருகின்றது. ஆனால், சுகாதார அமைச்சர் மோசமான 'மந்திரவாதி மருத்துவரின்' ஆலோசனைக்கு அமைவாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

மேலும், விஞ்ஞானத்தை நம்புகின்ற பகுத்தறிவுள்ள ஒரு மனிதரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சர்வதேசத்தின் மத்தியில் எமது நாட்டை நகைப்பிற்குரியதாக மாற்றும் வகையிலான தனது அமைச்சர்களின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதரீதியான சடங்கில் ஈடுபடும் தனது முடிவை சரியென கூறும் அமைச்சர்!

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க மதரீதியான சடங்கில் ஈடுபடும் தனது முடிவை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சரியானதே கூறியுள்ளார்.

கொரோனா தொற்று பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் மேலும் சிலரும் மதரீதியான சடங்கில் ஈடுபடும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்திய விதிமுறைகள் குறித்து விவாதிக்க இன்று நாடாளுமன்றம் கூடியிருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், சுகாதார வழிகாட்டுதல்களைச் செயற்படுத்தும்போது, மதரீதியான சடங்கில் ஈடுபடுவதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு பௌத்தனாக பௌத்த சடங்குகளையும் போதனைகளையும் தான் பின்பற்றுவேன் என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறியுள்ளார்.

அதன்படி கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த களுகங்கையில் ஒரு பானை தண்ணீரை ஊற்றியமை தனது நம்பிக்கையின் ஒரு பகுதியாகும் என்றும் குறிப்பிட்டார்.

# சுகாதார ஊழியர்கள் 50 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று!

கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 50சுகாதார ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனாவின் முதலாவது அலையின்போது காணப்பட்ட நிலையை விட தற்போது வித்தியாசமான நிலைமை தோன்றியுள்ளது.

கொரோனாவின் 2ஆவது அலை ஆரம்பித்த பின்னர், 50சுகாதார ஊழியர்கள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சுகாதாரதுறை நெருக்கடியை எதிர்கொள்வதை தவிர்ப்பதற்கு பொறிமுறையொன்று மிகவும் அவசியமாகும். இவ்விடயம் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார சேவைகள் தடையின்றி இயங்குவதற்கு பொருத்தமான பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனிமைப்படுத்தல் காரணமாக சில வைத்தியசாலைகளில் முழுப் பிரிவுகளுமே மூடப்பட்டுள்ளன" என அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஊரடங்கு அனுமதி பத்திரம் பெறும் நடைமுறை!

நாட்டில் கொரோனா நெருக்கடியை அடுத்து தற்போது மாவட்டங்களுக்கு இடையிலான பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அத்தியாவசிய தேவைகளுக்காக ஊரடங்கு உத்தரவு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் முறைமையொன்றை பொலிஸார் அறிமுகம் செய்துள்ளனர்.

இதன்படி, அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புவதன் மூலம் ஊரடங்கு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹணஊரடங்கு தெரிவித்துள்ளார்.

மேலும், ஊரடங்கு அனுமதிப் பத்திரம் அவசியமானவர்கள் secretary@mws.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புவதன் ஊடாகவும் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரீட்சைப் பெறுபேறுகள் உரிய நேரத்துக்கு வெளிவருவதை உறுதிப்படுத்த இறுக்கமான நடைமுறைகள் அறிமுகம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவருவதை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய நடைமுறை ஒன்றை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அறிமுகப்படுத்தியுள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப் பகுதிக்குள் வெளிவராதனால் பட்டமளிப்பு விழா காலதாமதடைதல் மற்றும் மாணவர்கள் தொழில்வாய்ப்புக்களை பெறமுடியாமல் சிரமங்களை எதிர்நோக்குதல் பற்றிக் கடந்த 1ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் கணக்காய்வாளர் திணைக்கள அறிக்கை மூலம் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, அவர் இந்தப் புதிய இறுக்கமான நடைமுறையை பேரவைக் கூட்டத்தில் வைத்துப் பீடாதிபதிகளுக்கு அறிவித்தார்.

இதன்படி,

ஒவ்வொரு பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படும் நேரத்திலேயே, வினாத்தாள்களை மதிப்பீடு செய்தல், இரண்டாம் மதிப்பீடு, துறைத் தலைவரின் அனுமதி, பீடாதிபதியின் அனுமதி, பரீட்சைக் கிளையிடம் பெறுபேறுகள் ஒப்படைக்கப்படுதல் ஆகியவற்றுக்கான திகதிகளையும் முற்கொண்டே நிர்ணயிக்குமாறு துணைவேந்தர் அறிவுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அறிவுறுத்தலின்படி இரண்டு மாத காலப்பகுதிக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதை உறுதிப்படுத்தும் வகையில் இவை அனைத்தும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் நடைபெறுவதைப் பீடாதிபதிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

உரிய காலப்பகுதிக்குள் மதிப்பீடு செய்து முடிக்கப்படாத விடைத்தாள்களை அந்தந்த விரிவுரையாளரிடமிருந்து மீளப் பெற்று, பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயோ, அல்லது வேறு பல்கலைக்கழகங்களின் துறைசார்ந்த பொருத்தமான விரிவுரையாளர்கள் மூலமாகவோ மதிப்பிட்டு உரிய காலத்துக்குள் நிறைவுசெய்ய ஏற்பாடு செய்யுமாறும் துணைவேந்தர் பணித்துள்ளார்.

உரிய காலப்பகுதிக்குள் விடைத்தாள் திருத்தும் பணிகளை நிறைவுசெய்யாத விரிவுரையாளர்களுக்கு மதிப்பீட்டுக்கான கொடுப்பனவுகளை இரத்துச் செய்வதுடன், தண்டப்பணம் அறவிடும் பொறிமுறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பீடாதிபதிகளுக்குக் கண்டிப்பாக அறிவுறுத்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காலாதிகாலமாக பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவராமை குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் இந்தப் புதிய நடைமுறை மூலம் எதிர்காலத்தில் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கொரோனா வைரஸ் எதிர்ப்பு முகக் கவசத்தை தயாரித்த பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் முதல் முதலாக கொரோனா வைரஸ் எதிர்ப்பு முகக் கவசத்தை பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி குழு தயாரித்துள்ளது.

ஆன்டிவைரல் மைக்ரோ மற்றும் நானோ துகள்களாலான முகக்கவசம் ஒன்றை பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் குழுவினரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக முகக்கவசத்தில் ஏற்படும் தொற்றுக்களைத் தடுக்கும் வகையில் இந்த முகக்கவசம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த முகக்கவசம் மூன்று வடிப்பான்களைக் கொண்டுள்ளது. குறித்த முகக்கவசத்தை 20 முறை பயன்படுத்தலாம் மற்றும் ஒரு மாதத்திற்குக் கழுவாமல் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்றைய தினம் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு குறித்த முகக்கவசம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பல் வைத்தியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று

பேருவளை வைத்தியசாலையின் பல் வைத்தியர் ஒருவர் மற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே களுபோவில போதனா வைத்தியாசாலையில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியரொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

களுபோவில போதனா வைத்தியசாலையின் 15பி வோர்ட்டில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியரொருவருக்குமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியரொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பேரறிவாளன் கருணை மனு

# ஆளுநர் இழுத்தடிப்பு கவலையளிக்கிறது

## உச்சநீதிமன்றம்



பேரறிவாளனின் கருணை மனு மீது ஆளுநர் முடிவெடுக்காத விவகாரத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

"நாங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்த விரும்பவில்லை, ஆனால் இந்தப் பரிந்துரை (பேரறிவாளனின் கருணை மனு) 2 ஆண்டுகளாக ஆளுநர் முன் நிலுவையில் உள்ளது என்பது வருத்தம் அளிக்கிறது," என்று நீதிபதி எல்.நாகேஸ்வர ராவ் தலைமையிலான அமர்வு தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறை தண்டனை பெற்று வரும் நளினி, முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வது தொடர்பாகத் தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்து அதற்கான கோப்பினை தமிழக ஆளுநரிடம் வழங்கியது. ஆளுநரின் முடிவை அடுத்து 7 பேரும் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் 7 பேர் விடுதலை குறித்து ஆளுநர் இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை. அதே சமயம், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் எழுவரின் விடுதலைக்காகப் பல போராட்டங்கள் நடத்தி வருகிறார்.

இந்நிலையில் பேரறிவாளன் கருணை மனு தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்த போது "பல்துறை கண்காணிப்பு நிறுவனத்தின் (எம்டிஎம்ஏ) இறுதி அறிக்கைக்கும் பேரறிவாளன் விடுதலைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எம்டிஎம்ஏ இறுதி அறிக்கைக்காகக் காத்திருப்பதாக ஆளுநர் சொல்வதை ஏற்க முடியாது," என்று கூறியுள்ளது.

"அவ்வாறு ஆளுநர் கடிதம் எழுதியிருந்தால், எம்டிஎம்ஏ குறித்த ஆவணங்களை ஆளுநரிடம் தந்து தெளிவுபடுத்தினீர்களா?" எனத் தமிழக அரசிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் பேரறிவாளன் விடுதலை கோரிய வழக்கை வருகிற 23ஆம் தேதி விசாரிக்க உச்ச நீதிமன்றம் முடிவெடுத்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை படுகொலை செய்வதற்கான சதித்திட்டத்தில் ஈடுபட்டதாக கூறி 1991-ல் பேரறிவாளனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

அவர் 20 ஆண்டுகள் சிறையில் கழித்த பின்னர், 2014-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம், உச்ச நீதிமன்றம் பேரறிவாளனின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வவு. வடக்கு...

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் உள்ளிட்ட ஆளணியினரின் சம்பளப் பட்டியல் கணினி மென்பொருள் ஊடாக கணிப்பிடப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்படுகிறது.

எனினும் தற்போது சம்பளப்பட்டியல் மிகுதி சமப்படாத நிலையில் கணக்காளரால் ஆராயப்பட்ட நிலையில் சில ஆசிரியர்களின் சம்பளப் பட்டியலில் அதிகளவு கொடுப்பனவு கணிப்பிடப்பட்டு முன்னர் பணியாற்றிய உத்தியோகஸ்தர் ஒருவரின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது

2018ஆம் ஆண்டு கணக்காளர் மாற்றத்தின் பின்னர் கணினி மென்பொருளில் சில ஆசிரியர்களின் சம்பளப்பட்டியலில் மோசடியாக கொடுப்பனவு மாற்றம் செய்யப்பட்டு குறித்த உத்தியோகஸ்தரின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வவுனியாவைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட முகாமைத்துவ உதவியாளர், 2018ஆம் ஆண்டு தொடக்கம் 16 மில்லியன் ரூபாய் அரச நிதியை மோசடி செய்துள்ளார் என்பது வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மோசடி தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் வவுனியா வடக்கு கல்வி அலுவலகத்துக்கு நேரில் சென்று ஆராய்ந்ததுடன், மோசடி நபர் மீது உள்ளக மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அதிகாரிகளுக்குப் பணித்தார்.

## சுமந்திரன்...

அங்கு சென்றதால் சந்திப்பிலிருந்த சிறீதரன் மற்றும் சாள்ஸ் கையும் களவுமாக அகப்பட்டு கொண்டதாக ஆதரவாளர்களிடையே கதைகள் உலாவுகின்றன.

அண்மைக்காலமாக மாவை அணிக்கு எதிராக உள்ளூராட்சி உறுப்பினர்களை அணிதிரட்டி வந்த சுமந்திரன் அணியை சேர்ந்த சிறிதரன் மற்றும் சாளஸ் ஆகியோர் சந்திக்கும் இரவு கூட்டம் ஒன்று நேற்றிரவு நடைபெற இருந்ததை அறிந்த மாவை சேனாதிராஜா நேரடியாகவே அங்கு சென்று அவர்களை கையும் களவுமாக பிடித்திருந்ததாக முகநூல் பதிவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனிடையே சுமந்திரனால் கதிரையேற்றப்பட்ட உள்ளூராட்சி தலைவர்கள் கதிரைகள் ஆடிவருகின்ற நிலையில் பருத்தித்துறை பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

இன்று (2) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு 21 வாக்குகளில் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 16 வாக்குகளும், எதிராக 4 வாக்குகளும் இடப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 8, தமிழ் தேசிய மக்கள் முன்னணி 4, தமிழ் மக்கள் கூட்டணி 2, ஐக்கிய தேசிய கட்சி 1, பொதுஜன பெரமுன கட்சி 1 ஆகிய வாக்குகள் ஆதரவாகவும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 2, சிறீலங்கா சுதந்திர கட்சி 1 எதிராகவும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர் ஒருவர் வருகை தராமலும் வாக்குகள் பதியப்பட்டன.

## கடலில் குதித்து...

குறிப்பிட்டார். கொரோனா தொற்றை ஒழிப்பதற்கு சுகாதார அமைச்சர் கடலுக்கு பலியாவது பொருத்தமானது என சமூக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் பதிவுகளுக்கு பதில் அளிக்கும் வகையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இதனை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கொரோனா தொற்றை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லையென குற்றம் சாட்டினார்.

கொரோனா தொற்றை முற்றாக இல்லாதொழித்த நாடாக நியுசிலாந்து கருதப்படுகிறது. இருப்பினும் அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து விலகியதாகக் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு எதிர்க்கட்சி தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவலை நாட்டில் கட்டுப்படுத்துவதற்காக எதிர்க்கட்சி சமர்பித்த அனைத்து ஆலோசனைகளையும் சுகாதார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

இதேவேளை கொரோனா தொற்றை சமூக தொற்றாக இல்லையென்றால் பல்வேறு பிரதேசங்கள் முடக்கப்படுவது ஏன் ? என்றும் எதிர்கட்சி தலைவர் கேள்வி எழுப்பினார்.

## யாழில்...

கொரோனா தொற்று பரவல் அச்சத்தின் காரணமாக சுய தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு அரசினால் இடர் கால நிவாரணமாக 5000 ரூபா பெறுமதியான உணவு பொதிகள் நாளைய தினத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாண குடாநாட்டில் கொரோனா தொற்றுக்கு ள்ளானவர்களுடன் நேரடியாக தொடர்புகளை பேணியதன் அடிப்படையில், மற்றும் தொற்றுக்குள்ளானவர்கள் பயணித்த பேருந்து வண்டிகளில் பயணம் செய்ததன் அடிப்படையில் இன்றைய தின தரவின்படி 772 குடும்பத்தைச்சேர்ந்த 1700 பேர்வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் நாடுபூராகவும் வழங்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.மாவட்டத்திற்கான இடர் கால நிவாரண பொதிகள் நாளைய தினத்திலிருந்து அந்தந்த கிராம சேவகர்கள் ஊடாக தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது.

## கொரோனா இன்று...

காரணமாவே உயிரிழந்துள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

இந்த மரணம் இலங்கையில் பதிவான 23 ஆவது கொரோனா மரணமாக பதிவாகியுள்ளதாக சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இன்று 272 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொற்றாளர்களில் 3 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்கள் எனவும் மற்றும் பேலியகொடை தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகிய 269 பேரும் அடங்குவதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மினுவங்கொடை மற்றும் பேலியகொடை கொவிட் கொத்தணியில் இதுவரை பதிவான மொத்த கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 8129 ஆக அதிகரித்துள்ளது.

## வல்வெட்டித்துறையில்...

வல்வெட்டித்துகை ஊரிக்காடு பகுமியிலுள்ள கோழிப் பண்ணையில் தீவனம் தயாரிக்கும் பொயிலர் சிலிண்டர் வெடித்துச் சிதறியது.

பாரிய சத்தத்துடன் சுமார் 300 மீற்றர் தூரம் இந்த சிலிண்டர் வெடித்து சிதறியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அதே நேரம் அங்கு தரித்து நின்றிருந்த வாகனமொன்றும் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அருகிலுள்ள சில வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த பண்ணையில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் எட்டு மாதத்திற்கு முன்னர் ஒருவர் உயிரிழந்திருந்தும் குறிப்பிடத்தக்கது.

# காபுல் பல்கலைக்கழகத்தின் மீது தாக்குதல்; 19 பேர் உயிரிழப்பு!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தீவிரவாதிகள் நேற்று (திங்கட்கிழமை) நடத்திய தாக்குதலில் குறைந்தது 19 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் மிகப் பெரிய பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலை அடுத்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலான மோதல் ஒரு மணித்தியாலங்களுக்கும் மேலாக நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 3 தீவிரவாதிகள் தொடர்புபட்டிருந்ததாகவும் அவர்களில் ஒருவர் குண்டு வெடிப்பில் உயிரிழந்துள்ளதாகவும் ஏனைய இருவரும் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ஆப்கான் உள்துறை அமைச்சின் பேச்சாளர் தாரிக் அரியன் ஏ.எப்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீவிரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அநேகர் பல்கலைக்கழக மாணவர்கள் என காபுல் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும் இன்றைய தாக்குதலை தாங்கள் நடத்தவில்லை என தலீபான் அமைப்பு தெரிவித்துள்ளது. எனவே இது ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புபட்ட தீவிர பயங்கரவாத குழுவொன்று செய்திருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.



## கொரோனா வைரஸுக்கு வயது இடைவெளி கிடையாது!

கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு வயது இடைவெளியானது பாரிய தாக்கத்தை செலுத்தாது என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பாலித்த கருணாப்பிரேம தெரிவித்தார்.

தொலைக்காட்சியொன்றில் இடம்பெற்ற விசேட நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றும்போாத அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று வயது கூடியவர்களையே அதிகம் தாக்கும் என பொதுவான கருத்தொன்று நிலவும் நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் சமீப காலமாக சடுதியாக அதிகரித்து வருகிறது.

இலங்கையில் இதுவரையில் 11 ஆயிரத்து 335 பேர் இந்த தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், 21 பேர் இந்த தொற்றினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச பட்டியலில் முதல் 110 இடங்களுக்குள் இலங்கை




உலகை அச்சுறுத்தும் கொடிய கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த 3 நாட்களில் இலங்கை 3 இடங்கள் முன்னேறி 109 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகளவில் மக்களை அச்சுறுத்திவரும் நிலையில், இலங்கையிலும் அதன் பாதிப்பு தற்போதைய காலங்களில் வெகுவாக அதிகரித்து வருகிறது.

குறிப்பாக மினுவங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணி காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

இந்நிலையில்இ நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 335 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இந்த வைரஸ் காரணமாக நாட்டில் 21 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறான நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த மாதமளவில் சுமாராக 130ஆவது இடத்தில் இருந்த இலங்கை கடந்த வாரத்தில் சடுதியாக முன்னேறி 112ஆவது இடத்தைப் பிடித்தது.

இந்த நிலையில், கடந்த 3 தினங்களில் மேலும் 3 இடங்கள் முன்னேறி 119ஆவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடு எங்கு செல்கிறது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்

தற்போதைய கொரோனா தொற்றுடன் நாடு செல்ல வேண்டிய திசையை நாட்டின் மக்களே தீர்மானிக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே, தொற்று பரவுவதைத் தடுக்க ஜனாதிபதி உறுதியான முடிவுகளை எடுத்துள்ளார் என குறிப்பிட்டார்.

அதன்படி, முடிவுகள் நேற்று நாட்டின் தலைவரால் அறிவிக்கப்பட்டன என்றும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு இப்போது மக்களுக்கு உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கொரோனா தொற்றினை கட்டுப்படுத்துவதற்கான தனது முடிவை ஜனாதிபதி அறிவித்துள்ளார் எனவே மக்கள் அதைப் பின்பற்ற வேண்டும் என்றும் ஹரித அளுத்கே குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தமக்கான பொறுப்புணர்வுகளை மறந்து செயற்படுகின்றமையே நாட்டின் தற்போதைய நிலைமைக்கு காரணம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி கடல் நீரேரி பெருக்கெடுப்பு!

தென்மராட்சி கடல் நீரேரி பெருக்கெடுத்துள்ளமையால் நீரேரியை அண்டிய பகுதிகளில் வசித்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி சனசமூக நிலைய கட்டடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கடல் சில தினங்களாக ஊர்காவற்துறை, நாவாந்துறை, பூநகரி கடல் பெருக்கெடுத்திருந்தது. இந்நிலையில் தற்போது தென்மராட்சி கடல் நீரேரியும் பெருக்கெடுத்துள்ளது.

அதனால் கடல் நீரேரியை அண்டிய பகுதிகளில் தற்காலிக வீடுகளில் வசித்த குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி சனசமூக நிலைய கட்டடங்களில் தங்கியுள்ளனர்.



அதேவேளை , தென்மராட்சி, தனங்களப்பு பகுதியில் 20 வயற்காணிகளான சுமார் 6 ஏக்கர் வயற்காணிக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளது. இதனால் 6 ஏக்கர் நெற் செய்கை முற்றாக பாதிப்படைந்துள்ளது.

வயற்காணிக்குள் கடல் நீர் உட்புகுந்தமையால், இனிவரும் காலங்களிலும் நெற்செய்கை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவில் கொரோனா பரிசோதனை 11 கோடியை தாண்டியது!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிவதற்காக நேற்று மட்டும் 8.55 இலட்சம் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.எம்.ஆர் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று வரை மட்டும் 11 கோடியே 7 இலட்சத்து 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 82.29 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதுவரை 75.44 இலட்சம் பேர் பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர். புதிய நோய்த்தொற்றும் படிப்படியாக குறைந்து வருகிறது.



அதேசமயம் கொரோனா தொற்றை விரைவாக கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக பரிசோதனைகள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.